DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 474/2024

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | ஆகாஷ் |
| Father / Husband Name | முருகேசன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 19.08.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கீழநர்மா கிராமத்தில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். 30.06.2024 ம் தேதி மாலை 6.00 முதல் 6.30 மணிக்குள் நானும் எனது நண்பன் யுகேஷ்குமாரும் அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் யுகேஷ்குமார் வண்டி ஓட்ட நான் அமர்ந்து வந்தபோது கரிக்கிளி ஆர்ச் அருகே வரும்போது ஆஜர் எதிரிகள் எங்களது வண்டியை மடக்கி எங்களை எந்த ஊரு என்று விசாரித்தார்கள். அப்போது 1ம் எதிரி விஜயபாரதி என்னை பார்த்து தெவிடியா பையா உனக்கு இங்கு என்ன வேலை என்று அசிங்கமாக பேசினார்.

2. நான் ஏன் அசிங்கமாக பேசுறீங்க என்று கேட்டதற்கு என்னை ஆஜர் எதிரிகள் இருவரும் கையால் அடித்து என்னிடம் இருந்த Vivo Y35 என்ற போனையும், என் நண்பர் யுகேஷ்குமார் கையில் போட்டிருந்த மோதிரம் மற்றும் பணம் கேட்டு மிரட்டினார்கள். நாங்கள் இல்லை என்று சொன்னதும் ஒன்றாம் எதிரி கையில் வைத்திருந்த கத்தியை எடுத்து கழுத்தில் வைத்து மோதிரம், செல்போன், பணம் கொடுக்கவில்லை என்றால் விடமாட்டோம் என்று மிரட்டி அவரது இருசக்கர வாகனத்தில் எங்களை ஏரிக்கரைக்கு அழைத்துச்சென்று முட்டி போடவைத்து ெஹல்மெட்டால் எங்கள் இருவரையும் அடித்து காயம் ஏற்படுத்தினார்கள்.

3. பின்னர் எங்கள் கையில் இருந்த போனையும், எனது நண்பர் வைத்திருந்த மோதிரத்தையும் பரித்துக்கொண்டு வெளியே சொன்னால் உங்களை கொல்லாமல் விடமோட்டோம் என்று மிரட்டினார்கள். இந்த சம்பவத்தை பற்றி போலிசாரிடம் சொன்னால் நீங்கள் இரண்டு பேரும் கஞ்சா விற்றதாக பொய்யாக போலிசாரிடம் சொல்வோம் என்று மிரட்டினார்கள். மேலும் எங்களை முட்டிபோடச்சொல்லி மிரட்டியபோது நாங்கள் தான் கஞ்சா விற்பனை செய்தோம் என்று எங்களை சொல்லச்சொல்லி மிரட்டினார்கள். நாங்கள் எதிரிகள் சொன்னவாரே சொன்னோம். அதை எதிரிகள் என்னுடைய போனில் வீடியோ எடுத்தார்கள். பின்னர் போனையும் மோதிரத்தையும் பிடுங்கிக்கொண்டு எங்களை அனுப்பிவிட்டார்கள். நாங்கள் பயந்துக்கொண்டு வீட்டிற்கு சென்றுவிட்டோம்.

4. பின்னர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் கண்ட Vivo Y35 என்ற செல்போன் என்னுடையது தான். **(அது சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எதிரிகள் எடுத்த வீடியோ எனது செல்போனில் பதிவாகியுள்ளது.

**(வீடியோவை குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**